ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1908/22 - 2015 මාර්තු මස 31 වැනි අඟහරුවාදා - 2015.03.31

*1908/22 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையின் மகாஓயா நீர் வழங்கல் கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் நீர் கோபுரம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு காணித் துண்டொன்று தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,<br>
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்<br>
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,<br>
"லக்திய மெதுர",<br>
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,<br>
பெலவத்தை,<br>
பத்தரமுல்லை,<br>
2015, மாச்சு 23.<br>
5/2/2/1073

**அட்டவணை**

அம்பாறை மாவட்டத்தில் மகாஓயா பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 136/ஏ/1, பொரபொலை கிராம அலுவலர் பிரிவின் பொரபொலை கிராமத்தில் அமைந்துள்ள பொரபொலை பன்சல்வத்த எனும் காணியை காட்டப்படுகின்ற அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் திரு. எம். ஜீ. அபேகுணவர்தன அவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட 2014/W1 வரைவின் துண்டு இலக்கம் 1 என காட்டப்படும் மொத்த அளவில் இருந்து சுமார் 01றூட். 16.79 பேர்ச்சஸ் மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இந்த காணியின் மீதித்துண்டு ; |
| கிழக்கு | : | இந்த காணியின் மீதித்துண்டு ; |
| தெற்கு | : | 2,3 ஆம் இலக்க துண்டுகள் மற்றும் இந்த காணியின் மீதித்துண்டு ; |
| மேற்கு | : | இந்த காணியின் மீதித்துண்டு. |

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : விஹாராதிபதி,<br>
ஸ்ரீ ஸாக்கியசிங்காராமை,<br>
பொரபொலை,<br>
மஹஓயா.

4- 532

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.



2 - G 21337

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொணராகலை - மடுல்ல ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ், நீர் சுத்திகரிப்பு அலகினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்*
*வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2015, மாச்சு 23.*
*5/2/2/1063*

**அட்டவணை**

*மொணறாகலை மாவட்டத்தில் மொணறாகலை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 131- A, கும்புக்கனை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள பாரவில கிராமத்தில் அமைந்துள்ள குமாரவத்தை அல்லாதவிடத்து கும்புக்கண பாரவில பகுதி எனும் காணியில், சுமார் 2 ஏக்கர் விஸ்தீரணத்திலான கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.*

*வடக்கு : இந்த காணியின் மீதித்துண்டு ;*
*கிழக்கு : இந்த காணியின் மீதித்துண்டு ;*
*தெற்கு : இந்த காணியின் மீதித்துண்டு ;*
*மேற்கு : குமாரவத்தை வரை நோக்கிய பாதை.*

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி : தலைவர்,*
*ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை,*
*இல. 35/75, வொக்ஷோல் வீதி,*
*கொழும்பு 02.*

*4- 533*

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையின் காலி நீர் வழங்கல் திட்டத்தை மேம்படுத்துவது தொடர்பாக ஸ்ரீ தர்மராஜ மாவத்தையில் நீர்ப்பம்பி நிலையம் அமைந்துள்ள காணியை எடுத்துக்கொள்வதற்கு தேவைப்படுவதனால், கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்*
*வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2015, மாச்சு 23.*
*5/2/2/1046*

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டம் காலி- கடவத்சத்தர பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 98A, வடமலமுல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கும்புல்வெல்ல போயகலகந்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள டிங்கினிகேவத்த எனும் காணியின் ஒரு பகுதியில் அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர் திரு. டபிள்யூ. எஸ். எஸ். அம்பவத்த அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. 1500 ஐக் கொண்ட வரைபடத்தில் துண்டு எழுத்து A என காண்பிக்கப்பட்டுள்ள 0.89 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

வடக்கு : ஸ்ரீ தர்மராஜ மாவத்தையில் மதிப்பீட்டு வரி இலக்கம் $1^{A}$ ஐக் கொண்ட டிங்கினிகேவத்தை எனும் காணி ;
கிழக்கு : ஸ்ரீ தர்மராஜ மாவத்தையில் மதிப்பீட்டு வரி இலக்கம் $1^{A}$ ஐக் கொண்ட டிங்கினிகேவத்தை எனும் காணி ;
தெற்கு : ஸ்ரீ தர்மராஜ மாவத்தை ;
மேற்கு : டிங்கினிகேவத்தை அல்லா கன்னந்த ஓவிட்ட.

காணிக்கு உரிமைகோருபவர்களின் பெயர் மற்றும் முகவரி :

1. திருமதி ஜே. ஜீ. சொமிநோனா,
இல. 56, ஸ்ரீ தர்மராஜ மாவத்தை,
வக்வெல்ல வீதி - காலி.

2. திரு. பியசேன குணரத்ன,
இல. 06, ஸ்ரீ தர்மராஜ மாவத்தை,
வக்வெல்ல வீதி - காலி.

4- 534

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.